**கவனிக்க .-** *31.05.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1814 - 2013 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2013.06.07

*1814 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1538 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1541 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) மைத்திரிபால சிறிசேன லக்தரு திரிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தும்) சட்டமூலம் 2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## மத்திய மாகாண அரச சேவை - அம்பகமுவ பிரதேச சபை

அம்பகமுவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிடருந்து கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள திட்டம் | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | சாரதி III வகுப்பு முதன்மை தரம் தொழில் நுட்பமற்ற பிரிவு | 03 | PL 3 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170- ரூ. 18,860 | குறிப்பு 01 ஐ பார்க்கவும் |
| 2 | மருந்து கலவையாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில் நுட்பமற்ற பிரிவு | 01 | PL 2 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 12,210-10×130-10×145-10×160-12×170- ரூ. 18,600 | குறிப்பு 02 ஐ பார்க்கவும் |
| 3 | மின்சார தொழில் நுட்பவியலாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில்நுட்ப மற்ற பிரிவு | 01 | PL 2 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 12,210-10×130-10×145-10×160-12×170- ரூ. 18,600 | குறிப்பு 03 ஐ பார்க்கவும் |
| 4 | நூலக உதவியாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில்நுட்ப மற்ற பிரிவு | 03 | PL 1 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூ. 17,600 | குறிப்பு 04 ஐ பார்க்கவும் |
| 5 | அலுவலக உதவியாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில்நுட்ப மற்ற பிரிவு | 02 | PL 1 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூ. 17,600 | குறிப்பு 04 ஐ பார்க்கவும் |
| 6 | மருந்தக உதவியாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில்நுட்ப மற்ற பிரிவு | 01 | PL 1 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூ. 17,600 | குறிப்பு 04 ஐ பார்க்கவும் |
| 7 | வீதி தொழிலாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில் நுட்பமற்ற பிரிவு | 06 | PL 1 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூ. 17,600 | குறிப்பு 05 ஐ பார்க்கவும் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள திட்டம் | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 8 | சுகாதார தொழிலாளர் III வகுப்பு முதன்மை தரம் தொழில் நுட்பமற்ற பிரிவு | 04 | PL 1 2006 (A) தொடக்க நிலை | மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூ. 17,600 | குறிப்பு 05 ஐ பார்க்கவும் |

**குறிப்பு 01**

* க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி.
* அமைய/ தற்காலிக/ உடன்படிக்கையின்படி இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் ஏற்புடைய வகையில் முன்னால் சேவைப்பிரமாணத்தின் அடிப்படையில், கல்வித்தகைமை (8ஆம் வகுப்பு பொருத்தமுடையதாகும்)
* 24 அந்தருக்கு குறைந்த ஸ்டேசன் வெகன் வண்டி ஓட்டுதல் பற்றிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல்.
* மேற்படி தரத்திலான வாகன சாரதியாக ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
* ஆகக்குறைந்த உயரம் 5 அடி 2 1/2 அங்குலமாக இருத்தல் வேண்டும்.
* இரவு பகல் சேவையில் ஈடுபடக்கூடியவாறு தெளிவான கண்பார்வையோடு உடல் ஆரோக்கியம் காணப்படல் வேண்டும். (23.12.2011 ஆந் திகதி சேவையில் இருந்தவர்களுக்கு வயதெல்லை பொருத்தமற்றது).

**குறிப்பு 02**

* க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி.
* அம்பகமுவ பிரதேச சபையில் ஆயுர்வேத மருந்தகத்தில் ஏதேனும் ஒரு பதவியில் 5 வருடங்களுக்கு மேலாக நிரந்தர சேவையினை பூர்த்தி செய்துள்ளார்கள் முன்னைய நிபந்தனை தகைமை (8 ஆம் வகுப்பு சித்தி) பூர்த்தி செய்திருத்தல் போதுமானது).

**குறிப்பு 03**

* க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி, அல்லது தேசிய கல்வி நிறுவன பொது சான்றிதழ் (சா. த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் குறைந்தது 02 பாடங்களில் தகைமை சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
* மின் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பின்வரும் கற்கைநெறியினை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
* தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் (DTET) ஒரு வருட கற்கைநெறியினை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

* தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) ஒரு வருடத்திற்கு குறையாத கற்கைநெறி.

அல்லது

* இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) ஒரு வருடத்திற்கு குறையாத பயிற்சி.

அல்லது

* தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்திற்கு குறையாத பயிற்சி

அல்லது

* பயிற்சி மற்றும் தொழிற் கல்வி சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத கற்கை நெறியினை பயின்றிருத்தல்.
* அனுபவம் - குறித்த துறையில் 02 வருட அனுபவம் குறித்து சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்தல்.

**குறிப்பு 04**

* க.பொ.த./சா.த. பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி.

**குறிப்பு 05**

* எட்டாம் (08) வகுப்பு சித்தி (09 ஆம் ஆண்டு)
* குறித்த தகைமை உடைய விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் முன்னைய சேவை தகைமையினை உடைய உள்ளக விண்ணப்பதாரர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

**பொதுவான தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரி பரம்பரையில் அல்லது பதிவு செய்ததின் பிரகாரம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி அம்பகமுவ பிரதேச சபையின் எல்லைக்குள் கடந்த 03 வருட காலத்திற்குள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை பெயர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதிசெய்தல் வேண்டும்.) (அம்பகமுவ பிரதேச சபையில் தற்போது நிரந்தர/ அமைய/ பதில்/ தற்காலிக/ ஒப்பந்த/ மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் அம்பகமுவ பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பது கட்டாயமில்லை.)

(iii) அம்பகமுவ பிரதேச சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(iv) நன்னடத்தையுடன் கூடிய சுகதேகியாக இருத்தல் வேண்டும்;
(v) விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு வயது 18 குறையாது 45 க்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டும். (தற்போது சேவையில் இருப்பவருக்கு வயது எல்லை கருத்தில் கொள்ளப்படாது, ஆனால் பதவிக்கு சேர்த்து கொள்ளும் திகதிக்கு குறிப்பிட்ட வயது எல்லைக்குள் இருத்தல் வேண்டும்) ;
(vi) விண்ணப்பதாரி தண்டச் சட்ட விதிமுறையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்ற தீர்ப்பளிக்கப்பட்டவராகவோ அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் நீக்கப்பட்டவராகவோ அரச சேவையை விட்டு சென்று மீள சேவையில் இணைய முடியாது போனவராக இருத்தல் கூடாது ;
(vii) சேவையின் தேவைக்கமைய முறையான நேர்முக பரீட்சையின் மூலம் தகைமையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் ;
(viii) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்து கொள்ள தாமதமாவது அல்லது இவ் அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது அம்பகமுவ பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை:**

(i) நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்;

(ii) குறிப்பிட்ட தகைமைகள் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**சேவை நிபந்தனைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும் ;

(ii) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் அங்கத்துவம் உரியதாகும் ;

(iii) பதவி 03 வருட சேவை காலத்திற்கு உட்படுவதுடன் அம்மூன்று 03 வருட இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் உயர் நிலையில் இருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் பதவி நிரந்தரப்படுத்தப்படும் ;

(iv) இச் சேர்த்துக்கொள்ளல் இலங்கை குடியரசின் தாபன கோவையின் சட்டத்திட்டங்களுக்கும் நிதி சட்டத்திட்டங்களுக்கும் திணைக்கள கட்டளைக்கும் அரச அல்லது மத்திய மாகாண சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய சட்டங்கள் கட்டளைகளுக்கு அமைய செயற்பட சகல சேவையாளர்களும் உடன்பட்டிருத்தல் அவசியம்.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை A 4 அளவிலான கடதாசியின் இரு புறங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 26.06.2013 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''செயலாளர், அம்பகமுவ பிரதேச சபை, கினிகத்தேனை'' எனும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி '..........' என்று குறிப்பிடப்பட வேண்டும் பூரணமாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், சான்றிழ்களின் நகல் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதுடன் அதன் மூலப்பிரதி நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்:-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ் (சாரதி பதவிக்காக வழங்கப்பட்டுள்ள சாரதி தகைமைகளை குறிப்பிடும் சான்றிதழ்) ;
(iv) தேசிய அடையாள அட்டை ;
(v) வதிவினை உறுதிப்படுத்துவதற்காக அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன்) ;
(vi) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்பண்பு சான்றிதழ்கள் இரண்டு ;
(vii) அனுபவம் தொடர்பான சான்றிதழ் ;
(viii) அம்பகமுவ பிரதேச சபையில் கடமையாற்றுபவராயின் சேவைச் சான்றிதழ்.

ஆ. சரவணபவன்,
செயலாளர்,
அம்பகமுவ பிரதேச சபை,

அம்பகமுவ பிரதேச சபை,
கினிகத்தேனை.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மத்திய மாகாண அரச சேவை - அம்பகமுவ பிரதேச சபை**

................................ பதவி

1. விண்ணப்பத்தாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
2. முதலெழுத்து குறிப்பிடும் பெயர் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. தொலைபேசி இலக்கம் :----.

5. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதி திகதியில் வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. பால் (ஆண்/பெண்) :----.
9. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
10. தேசிய இனம் :----.
11. நீங்கள் இலங்கைப் பிரசையா, அவ்வாறாயின் பரம்பரையில் அல்லது பதிவு செய்ததின் பிரகாரமா ? :----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. அனுபவம் மற்றும் தொழில் தகைமை :----.
14. நீங்கள் தற்போது அம்பகமுவ பிரதேச சபையில் சேவை செய்பவராயின்
(i) தற்போது வகிக்கும் பதவி :----.
(ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iii) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக /பதில்/ஒப்பந்த/மதிப்பீடு/அடிப்படையிலா? :----.
15. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :----.

ஆம் எனில் குற்றத்தின் தன்மை :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏதேனும் பிழையானவை என இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கும் முன்தெரிய வந்தால் நான் தகுதி அற்றவர் எனவும், நியமனம் கிடைத்தபின் அவ்வாறான விடயம் நிரூபிக்கப்பட்டால், எவ்வித நஷ்டஈடுமின்றிச் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது மத்திய மாகாண அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிர்வாக அதிகாரியின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ...................................... இந் நிறுவனத்தில் .................................. ஆக சேவையில் உள்ளார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் இவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இவர் எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் இத்தால் உறுதிபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

-----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.
திகதி :----.

6-139

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மஹரகம நகர சபை**

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன எள்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

காந்தி கொடிகார,
தலைவர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2013.05.15.

**அட்டவணை**

| பாதையின் பெயர் | பரப்பளவு | நீளம் அடி | அகலம் | தொடக்கம் | முடிவு |
|---|---|---|---|---|---|
| மகரகமை பமுனுவை தேவாலய வீதி விகாரை மாவத்தை இலக்கங்கள் : 162/ஏ, 162,162/1,162/பீ, 21/23 உடைய வீடுகள் அமைந்துள்ள கிளை வழி | சி. எம். தாஜுதீன் அளவையாளரால் 2002.03.13 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 9/75 ஆம் இலக்கம் உடைய நில அளவைத் திட்டத்துக்கு அமைய | 85 மீட்டர் | 10 அடி | 21/24 | 21/19 |
| பன்னிபிட்டிய கொட்டாவை, அமுஎட்டமுல்லை வீதி இலக்கங்கள் : 1549/6, 1549/6/1ஏ, 1549/11பீ, 1549/6ஏ, 1549/13, 1549/1ஏ, 15496/2ஏ, 1549/7, 1549/7ஏ உடைய வீடுகள் அமைந்துள்ள கிளை வழி. | | 250 | 15.0 | 45 | |
| கோட்டே, மிரிகானை, ரஜமாக விகாரை வீதி, ஜனதா மாவத்தையில் இலக்கங்கள் : 19/2 தொடக்கம் 21 வரையுமுள்ள வீடுகள் மற்றும் இணைந்த வீடுகள் 15 அளவில் தொடர்புடைய கிளை வழி. | | 350 | 10 | 21 | 19/3 |
| பன்னிப்பிட்டிய, தெபானமை, வீர வீதி இலக்கங்கள் : 200/8பீ, 476, 200/9, 200/9சீ, 476/1, 200/26ஏ ஆகிய வீடுகளுக்குப் போகும் வழி. | எஸ். ராமகிருஷ்ணன் அளவையாளரால் 1992.09.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 4547 ஆம் இலக்கம் உடைய நில அளவைத் திட்டத்துக்கு அமைய | 217 | 1 | 478 | 4547 நில அளவைத் திட்டத்துக்கு அமைய 10 அடி அகலமுள்ள பாதை முடிவு. |
| மகரகமை நாவின்னை தேவானந்த வீதி கிளை வழியில் வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 29/4, 29/6, 29/8, 29/10, 31/2, 29/7 உள்ள வீடுகள் அமைந்துள்ள வழி. | கே. டபிள்யூ. டீ. சந்திராணி அளவையாளரால் 2012.04.03 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 2294 ஆம் இலக்கம் உடைய நில அளவைத் திட்டத்துக்கு அமைய | 190 | | 2914 | 2917 |

**மேல் மாகாண சபை**

**பாலிந்தநுவர பிரதேச சபை பொது நூலகத்திற்கான யாப்பின் விதிகள்**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திட்டத்தின் பிரதேச சபையில் முன்மொழிந்த யாப்பு விதி, விதிமுறையின்படி 2 ஆவது சரத்தின் கீழ் மேல் மாகாண சபையிலே உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் முன்மொழியப்பட்ட 2005.02.18 ஆந் திகதி இலக்கம் 1381 சரத்தின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதியில் மாகாண சபை அறிவிப்பின் கீழ் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபையின் பொது நூலகத்தை யாப்பு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்தின் உள்ளூராட்சி சபைச் சட்டத்தின் கீழ் 12 ஆவது பகுதியின்கீழ் குறிப்பிட்டுள்ள 122ஆவது சரத்தின் உள்ளூராட்சி சபைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இந்த யாப்பின் விதிமுறையின்படி மேல் குறிப்பிட்டுள்ள 2 ஆவது சரத்திற்கான கீழ் வரவேற்கப்பட்ட 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதி இடம்பெற்ற மாதாந்த பொது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 2013, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஏற்றுக்கொண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது என அறியத்தருகின்றோம்.*

ஏ. என். பெலவத்தை,
செயலாளர்,
பாலிந்தநுவர பிரதேச சபை.

*பிரதேச அலுவலகம்,*
*பாலிந்த நுவர*
*2013.03.15.*

*6-138*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2013 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.06.2013 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2013 |
| | | வியாழன் | 08.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2013 |
| | | வெள்ளி | 16.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2013 |
| | | வெள்ளி | 23.08.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 08.08.2013 |
| | | வெள்ளி | 30.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.